# இந்திய-பிரான்ஸ் கலாசார இணைப்பின் அடையாளம் புதுச்சேரி

## துணைத் தூதர் பிலிப்பி காமியாமா பேச்சு

**புதுச்சேரி,நவ.18:** இந்திய-பிரான்ஸ் நாடுகளின் கலாசார இணைப்பின் அடையாளமாக புதுச்சேரி விளங்குவதாக பிரான்ஸ் துணைத் தூதர் பிலிப்பி ஜான்வியர் காமியாமா தெரிவித்தார்.

புதுச்சேரியில் பிரெஞ்சு ஆய்வு நிறுவனம் 1955-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் 60-ஆவது ஆண்டு விழா புதன்கிழமை நடைபெற்றது.

விழாவில் பிரெஞ்சு துணைத் தூதர் பிலிப்பி ஜான்வியர் காமியாமா பங்கேற்று பேசியது: பிரெஞ்சு ஆய்வு நிறுவனம் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை அளித்து வருகிறது.

இந்தியா-பிரான்ஸ் நாடுகளிடையே கலாசார இணைப்புக்கான நகரமாக புதுச்சேரி விளங்குகிறது.

இங்கு இந்நிறுவனம் அமைந்துள்ளதால் அனைத்துத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை செய்துள்ளது. குறிப்பாக, இந்திய நாட்டு மக்களைப் பற்றி ஆய்வு (Indology) மேற்கொள்ளப்பட்டுள்ளது. 8,500-க்கும் மேற்பட்ட பழங்கால அரிய ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வனவளம், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் கர்நாடகம், தமிழகம், கேரள வனத் துறைகளோடு இணைந்து செயல்படுகிறது. பயனுறு தகவல் களஞ்சியமாகவும் செயல்படுகிறது. பல்வேறு தரப்பினரிடையே கலாசார பரிமாற்றம், சகோதரத்துவம், சகிப்புத்தன்மையை வளர்ப்பதிலும் ஆய்வு நிறுவனம் பங்காற்றி வருகிறது என்றார் காமியாமா.

முன்னதாக, விழாவுக்கு தலைமை வகித்து பிரெஞ்சு ஆய்வு நிறுவன இயக்குநர் பியாரி கிராட் பேசியது:

இந்திய-பிரெஞ்சு வரலாறு, அறிவியல், பழங்கால சிற்பங்களை ஆவணப்படுத்துதல், கட்டட வடிவமைப்பு, தட்பவெப்ப நிலை மாற்றம் உள்பட பல்வேறு தலைப்புகளில் இந்நிறுவனம் பங்களிப்பை அளித்து வருகிறது.

இந்திய-பிரெஞ்சு கலாசாரம் தழைக்கவும் உதவி வருகிறது. சம்ஸ்கிருதம் முதல் நவீன அறிவியல் படைப்புகள் தொடர்பாக அறிஞர்கள், விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

இங்கு மேற்கொள்ளப்பட்ட சைவ சித்தாந்தம் தொடர்பான ஓலைச்சுவடிகள் சேகரிப்பு பணியை யுனெஸ்கோ நிறுவனம் பாராட்டி உள்ளது. மேலும், 1.6 லட்சம் கருப்பு-வெள்ளை புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

தென்னிந்திய கோயில் கட்டடக்கலையை அடிப்படையாகக் கொண்டுள்ள இப்படங்கள், சட்டவிரோதமாக சிலைகளை கடத்துவோரை பிடிக்கவும் உதவி உள்ளது. என்றார் கிராட்.

விழாவில், ஆய்வு நிறுவனத்தில் செய்யப்பட்ட பல்வேறு ஆய்வு புத்தகங்கள் பார்வைக்காக வைக்கப்பட்டன. புதுச்சேரி, பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் இருந்தும் 150-க்கும் மேற்பட்ட அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

நிறைவில், பாரீஸ் பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. ஓய்வு பெற்ற நீதிபதி தாவீது அன்னுசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.



புதுச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தில் புதன்கிழமை நடைபெற்ற 60-ஆம் ஆண்டு விழாவில் பேசுகிறார் ஓய்வு பெற்ற நீதிபதி தாவீது அன்னுசாமி.